" காலத்திற்கேற்ப வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம் ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை " - தேசியத் தலைவர் மேதகு. வே பிரபாகரன்

Dec 21, 2011 / பகுதி: முக்கியச் செய்தி /

# புலம்பெயர்ந்த மண்ணில் இறுதிவரை பிறழாது செயற்பட்டவர் - தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்ஸ்

ஈழமுரசு இதழின் பூபாளம் நிறுவனத்தின் முன்னாள் உரிமையாளரும், தற்போதைய ஊடக



இல்லத்தின் தலைவருமான அந்தோனி பிரான்சிஸ் அவர்கள் 16.12.2011ம் திகதி தனது அறுபதாவது அகவையில் சாவடைந்தமை எமக்கெல்லாம் ஆறாத ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் அதன் உப அமைப்புக்களான தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழீழ மக்கள் பேரவை, தமிழ்ப் பெண்கள் அமைப்பு, தமிழ் இளையோர் அமைப்பு, தமிழர் கலைபண்பாட்டுக் கழகம், தமிழர் விளையாட்டுத்துறை ஆகியவைகள் இணைந்து தெரிவித்துக்கொள்கின்றன.

உண்மையில் தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தாயகத்திலும் புலம் பெயர்ந்த பிரான்சு மண்ணிலும் அமரர் அந்தோனி பிரான்சிஸ் அவர்கள் இரண்டு தாசாப்தங்களாக மிகவும் உறுதியோடும், நம்பிக்கையோடும் செயற்பட்டு வந்தமையை நாம் நன்கு அறிவோம்.

இவருடன் உரையாடும் போது அவர் காட்டும் தேசியப்பற்று என்பது சொற்களால் சொல்ல முடியாது. தனது குடும்ப நிலையை எண்ணாது ஓர் ஊடக நிறுவனத்தில் செயற்பட்டமை அவர் தாயக விடுதலையின்பால் கொண்டிருந்த பற்றுதியை பறைசாற்றி நிற்கின்ற அதேவேளையில் 2002ம் ஆண்டு தாயகத்தில் ஏற்பட்ட சமாதான ஆரம்ப கட்டத்திலே அங்கு சென்றதுடன் தான் தமிழீழத்தின் பிரசை என்ற பதிவேட்டில் தன்னை பதிவு செய்து கொண்டமையும், அக்காலத்தில் சிங்கள அரசின் பொருளாதாராத் தடையால் துன்பப்பட்ட வேளையில் எமது மக்களுக்கு இவர்கொண்டு சென்று வழங்கிய பொருட்களும் பேருதவியாக அமைந்தது என்பது தாயகத்தில் அது ஒரு பதிவாகிய விடயமாக பார்க்கப்படுகின்றது.

எமது ஆயுதப் போராட்டம் 2009 மே மாதத்தில் மௌனிக்கப்பட்ட போதும் புலம்பெயர் மண்ணில் தான் செய்ய வேண்டியதை சற்றும் தளராத மனவுறுதியுடன் செய்து வந்தமை இவரது உன்னத தாயக விடுதலைக்கான பற்றின் உறுதியான உண்மையான வெளிப்பாடாகும். ஏனெனில் இன்றைய சூழ்நிலையில் எம்மவர்களில் சிலர் தவிர்க்க முடியாத குழப்பங்களுக்குள் உட்பட்டு நிலைகுலைந்து தெளிவின்றி திசைதெரியாது ஆட்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அமரர் அந்தோனி பிரான்சிஸ் தான்கொண்ட கொள்கையில் சற்றும் பிறழாது இறுதிவரை செயற்பட்டு வந்தமை எங்கள் எல்லோருக்கும் ஒரு முன்னுதாரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இவ்வேளையில் இவரது சிறப்பான தன்மையை நாம் உணர்ந்து செயற்படுவதுடன் அன்னாரின் இழப்பானது அவர் வகித்து வந்த ஊடக இல்லத்திற்கு ஒரு இழப்பாகவே எடுத்துக்கொள்வதோடு, இவ்விழப்பினை ஈடுசெய்ய எமது தேசியத்தலைவர் அவர்கள் புலம்பெயர் மண்ணில் தமிழ் மக்கள் எவ்வாறு தேசிய விடுதலையை வென்றெடுக்கின்ற பணியைத் தொடர வேண்டும் என எதிர்பார்த்தாரோ அதனை நேர்த்தியாகவும், உறுதியாகவும் இறுதிவரை செய்ய எல்லாத் தமிழ் மக்களும் முன்வரவேண்டும் என்றும், அதுவே இவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

இவரின் இழப்பால் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார் உறவினர் நண்பர்களளோடு பிரான்சு வாழ் தமிழீழ மக்கள் சார்பில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும் அதன் உப அமைப்புக்களும் தமது துயரத்தினை பகிர்ந்து கொள்கின்றது.

**தமிழர் ஒருங்கக்கிணைப்புக்குழு - பிரான்சு**

## காணொளிகள்




நித்திய வாழ்வினில் நித்திரை கொள்பவன்



பாலை திரைப்பட முன்னோட்டம்



தேசிய நினைவெ
நாள்- பிரித்தானிய

## எதிர்வரும் நிகழ்வுகள்

- சுவிஸ் Zürich, Solothum,ஆகிய மாநிலங்களில் புத்தாண்டும் புது நிமிர்வும்.
- "தேசத்தின் குரல்" 2011 - நோர்வே
- சுவிஸ் பேர்ன் நகரில் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரின் நினைவெழுச்சி நிகழ்வு.







## சிறப்புச் செய்திகள்

Dec 20, 2011

**தமிழர்கள் தரப்பினை குற்றம் சுமத்தவே நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டது -கஜேந்திரகுமார்**



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இறுதியில் புலிகளையும்;, தமிழர்தரப்பையும் குற்றம் சாட்டிக்கொண்டு முடிக்கப்படும் என நால்லிணக்கஆணைக்குழு உருவாக்கப்பட்டபோது

Dec 19, 2011

**ஈழத்தமிழர்களின் துயர் துடைக்க கனடாவில் மண்வாசனை**



தாயகத்தில் அல்லலுறும் மக்களின் துயர் துடைக்க கனடா கந்தசாமி ஆலயத்தில் நடைபெறும் மண்வாசனையில் கலந்துகொள்ளுமாறு கனேடிய தமிழர் தேசியஅவை கேட்டுக்கொண்டுள்ளது.

---

Dec 19, 2011

**உலகத்தமிழர்களின் அரசியல் வேணவாவை அசைக்க முடியாதாவறு ஆணி அடித்து இறுக்கிய தமிழ் சிவில் சமூகத்தினருக்கு தலைவணங்குகிறோம் - யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை**



"யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை (Volksrat der Eelam Tamilen - Deutschland e .V .) ஆகிய நாம் யேர்மனியில் அதன் சட்டங்களுக்கு உட்பட்டவாறு அதன் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டு இங்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் மற்றும் பல்லின சமூகத்தினரின் பங்களிப்புடன் ஜனநாயக வழியில் ஈழத்தமிழர்களின் உரிமைக்காக உழைக்கும் அமைப்பாகும் .

---

Dec 10, 2011

**மனித உரிமையை பாதுகாப்போம் !!!**

63 வது ஆண்டின் மனித உரிமை நாளையொட்டி யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவையாகிய நாம் ஏனைய நாட்டு மக்கள் படும் அவல நிலையை போல்....

---

Dec 7, 2011

**பிரான்சு நாட்டில் எதிர் வரும் தேர்தலில் எமது வாக்குரிமையை பயன்படுத்துவோம்!**

பிரான்சு நாட்டில் வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் அதிபருக்கான தேர்தலிலும் ஜின் மாதம் நடைபெற இருக்கும் பாராளுமன்ற தேர்தலிலும் பிரான்சில் வாழும் பிரான்சு குடியுரிமை பெற்ற தமிழ் மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

---

© Copyright 2004-2011 - Pathivu.com : pathivumedia@gmail.com